# கிறிஸ்து பிறப்பு விழா

# திருவழிபாடு ஆண்டு - B

# 2023-12-25

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 52:7-10,

*உலகெங்குமுள அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.,*

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 1:1-6,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 1:1-18)

***திருப்பலி முன்னுரை***

"*யார் வெச்சது? யார் வெச்சது? உன் சட்டமடா!*

*இங்கு வாழ்வென்பதும் சாவென்பதும் நிலம் மட்டுமடா!"...*

*என்ற பாடல் வரிகள் இன்றையச் சூழலில் திரும்பும் திசை எங்கும் ஒலிக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. ஆம்! திரும்பும் திசை எங்கும் பலவிதமான போராட்டங்கள் சூழ்ந்திருக்கின்றன. மக்களின் மனங்களில் அச்ச உணர்வானது குடிகொண்டிருக்கிறது. ஆனால் இத்தகைய சூழ்நிலையில் நாம் கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட இங்கு கூடியிருக்கிறோம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடி விட்டுச் செல்வதற்கு கிறிஸ்து பிறப்பு விழா என்பது ஒரு வாடிக்கையான நிகழ்வு மட்டுமல்ல. இது பல அர்த்தங்கள் கொண்ட ஒரு விழாவாகும். கிறிஸ்துவின் பிறப்பு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு விதமான பாடங்களை நமக்குக் கற்பிக்கிறது. இயேசு இந்த மண்ணகத்தில் பிறந்த நேரத்தை நாம் நினைவு கூறும்போது இன்று நிலவக்கூடிய அதே நிகழ்வுகள் தான் அன்றும் அரங்கேறிக் கொண்டிருந்தன. இயேசு இந்த மண்ணில் பிறந்த போது சட்டங்களால் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். மக்களுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்களே மக்களை நெரிக்கக்கூடிய சட்டங்களாக மாறின. மனிதர்களிடையே ஒரு அச்ச உணர்வு ஆழமாக குடிகொண்டிருந்தது. பாவத்தில் பலரும் உழன்று கொண்டிருந்தனர். இத்தகைய சூழலில் அவர்களை அச்சூழலில் இருந்து மீட்டெடுக்கவே இறைமகன் இயேசு இம்மண்ணில் அன்று அவதரித்தார். இன்று அதே இறைமகன் இயேசு இம்மண்ணில் அவதரிக்க இருக்கிறார். இன்றும் நாம் திரும்பும் திசை எங்கும் போராட்டங்கள். சட்டங்களால் மக்கள் தங்கள் உரிமைகளைக் கூட பெற முடியாத*

*அளவிற்கு ஒடுக்கப்பட கூடிய சூழ்நிலை. கொடிய நோய் தொற்று காரணமாக, அருகில் உள்ளவர்களை கூட அரவணைக்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அன்பு, பிறரன்பு, பொதுசேவை, என்பதெல்லாம் அச்ச உணர்வால் இன்று மழுங்கடிக்கப்பட்டு இருக்கக் கூடிய சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையில் இறைவன் இயேசு கிறிஸ்து அஞ்சாதீர்கள்! நான் உங்களுக்கு துணையாக இருக்கிறேன் என்ற வார்த்தைகளின் வடிவில் நம் உள்ளங்களில் பிறக்க வரவிருக்கிறார். பிறக்கவிருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நாம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு நம்மிடையே இருக்கக்கூடிய அச்ச உணர்வுகளை எல்லாம் கடந்து, இயேசு இந்த மண்ணில் வாழ்ந்த போது நமக்கு கற்பித்த இறையாட்சியின் மதிப்பீடுகளின்படி நாம் நமது வாழ்வை அமைத்துக்கொள்ள இன்றைய நாளில் நாம் அனைவருமே அழைக்கப்படுகிறோம். இன்று இயேசு கிறிஸ்துவின் பிறப்பு என்பது நமக்கு ஒரு நம்பிக்கையின் ஒளிச் சுடராக இருக்கிறது. இயேசுவின் பிறப்பை நமது உள்ளங்களில் நம்பிக்கையின் தீபமாகப் பிறக்க வைக்க அனைவரும் ஒன்றிணைந்து இந்த திருப்பலியில் அச்சம் தவிர்த்து, கலக்கம் தவிர்த்து, உறுதியான, அசைக்க முடியாத ஆண்டவர் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் இயேசுவை நமது உள்ளங்களில் பிறக்கச் செய்ய அனைவரும் இணைந்து இறைவனின் திருப்பலியில் பங்கேற்போம்.இறை ஆசீர் பெறுவோம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்புத்தந்தையே இறைவா!*

*உம் திருஉடலாம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் ஆகியோர் அனைவரையும் உம்பாதம் அர்பணிக்கிறோம். உம் பணியை தங்கள் வாழ்வாக்கி, இறைமக்களை அன்பின் சமூகமாக கட்டியெழுப்பவும், உம் அன்புக் கட்டளைகளை தங்கள் வாழ்நாளெல்லாம் கடைபிடிக்கவும் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*தாயும் தந்தையுமான இறைவா!*

*இன்று உம்மை தேடி வந்திருக்கும் எம் மக்களை நிறைவாக ஆசீர்வதியும். எவ்வாறு எம் அன்னையாம் கன்னிமரியாள் உம்மோடு ஒன்றித்து, உம் திருவுளத்தை நிறைவேற்றினாரோ, அதேபோன்று எம்மக்களும் ஒற்றுமையிலும், சமாதானத்திலும் ஒன்றித்திருந்து உம் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாக வாழ வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*ஞானத்தின் ஊற்றே இறைவா!*

*சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள என்றவரே, எம்கிராமத்தில் உள்ள சிறுகுழந்தைகள் அனைவரும் ஞானத்திலும், அன்பிலும், ஒழுக்கத்திலும் வளர்ச்சி பெற்று விளங்கவும், என்றும் உம் அன்பு பிள்ளைகளாக வளரவும் உம் வல்லமையை இவர்கள் மேல் பொழிய வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*நலம் அருளும் நல்ல ஆயனே இறைவா!*

*உடல்நலக் குறைவினால் மருத்துவமனையிலும், தங்கள் இல்லங்களிலும் இருந்து சிகிச்சை பெறும் ஒவ்வொரு நல்ல உள்ளங்களுக்காவும் உம்மிடம் மன்றாடுகிறோம். உமது அன்புக் கரங்களால் அவர்கள் ஒவ்வொருவரையும் தொட்டு குணப்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*